

சென்னை திருவான்மியூரில் நடைபெற்ற, சென்னை தென்மேற்கு மாவட்டம் – மயிலை கிழக்குப் பகுதி செயலாளர் எஸ்.முரளி – 17–வது வார்டு மாமன்ற உறுப்பினர் கீதா முரளி இல்லத் திருமண வரவேற்பு விழாவில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு, மணமக்கள் மு.கிருத்திகா – ச.விஸ்வவாகீஷ் ஆகியோரை வாழ்த்தினார்.



சென்னை திருவல்லிக்கேணியில் நடைபெற்ற, சென்னை மேற்கு மாவட்டம் – திருவல்லிக்கேணி பகுதி – 120 (அ) வட்டக் கழகச் செயலாளர் கேரளா என்.ரவி – ஆர்.துளசி ஆகியோரின் மகன் ரீகன், சந்திரன் – பார்வதி ஆகியோரின் மகள் சரண்யா காந்தி இணையரின் திருமண வரவேற்பு விழாவில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று, மணமக்களை வாழ்த்தினார்.

### மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கு அழைப்பிதழில் அறங்காவலர்களை புறக்கணிப்பது சட்டத்திற்கு எதிரானது;

# வளர்ச்சித் திட்டங்களை முடக்குவதே தற்போதைய அரசின் வழக்கமாகிவிட்டது!

## முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு குற்றச்சாட்டு



சென்னை, செப். 2 -

சட்டப்பேரவை நிகழ்வுக்குப் பின் முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு வரும் 17.09.2026 அன்று நடைபெற உள்ள நிலையில், குடமுழுக்குக்கான தேதியை நிர்ணயித்தது திராவிட மாடல் அரசு என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

திருக்கோயிலில் 79 கல் தூண்களைக் கொண்ட வீர வசந்தராயர் மண்டபம் திறந்து வைக்கப்பட்டு, 8 ஆண்டுகளுக்குப் பிறகு கிழக்கு கோபுர வாயிலும் மக்கள் பயன்பாட்டிற்காக திறக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகளுக்கு தற்போதைய அரசு சொந்தம் கொண்டாடுகிறது.

ஆனால், திராவிட மாடல் ஆட்சிக் காலத்தில் வீர வசந்தராயர் மண்டபத்தின் 79 கல் தூண்களையும் தேர்வு செய்வதற்காக, அமைச்சர் என்ற முறையில் நாமக்கல்லுக்கு நான் சுமார் 10 முறை நேரில் பயணம் மேற்கொண்டேன்.

பழங்காலத்தில் அந்தத் தூண்கள் எவ்வாறு வடிவமைக்கப்பட்டிருந்தனவோ, அதிலிருந்து சிறிதும் மாற்றமின்றி, பழைய பொலிவுடன் மண்டபத்தை மீட்டெடுக்க வேண்டும் என்ற அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு பார்த்துப் பார்த்துச் செதுக்கப்பட்ட வீர வசந்தராயர் மண்டபம் இன்று மக்கள் பயன்பாட்டிற்கு வந்திருப்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

**குடமுழுக்கு அழைப்பிதழில் 10 பிழைகள்**

வரும் 17.09.2026 அன்று நடைபெறவுள்ள குடமுழுக்கு விழாவிற்காக முதலில் வெளியிடப்பட்ட அழைப்பிதழில், இறந்தவரின் பெயர் இடம்பெற்றது உள்ளிட்ட 10 பிழைகள் இருப்பதை நாங்கள் சுட்டிக்காட்டிய பிறகுதான் அந்த அழைப்பிதழ் திருத்தப்பட்டு புதிதாக வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கிடையே பத்திரிகையாளர்களைச் சந்தித்த அமைச்சர் நிர்மல் குமார், “வருவோர் போவோர் பெயர்களையெல்லாம் அழைப்பிதழில் இடம்பெறச் செய்ய முடியாது; அறங்காவலர்களின் பெயர்களையும் இடம்பெறச் செய்ய மாட்டோம்” என்ற பொருளில் கருத்து தெரிவித்துள்ளார்.

இது வரலாற்றை அறியாமல் தெரிவிக்கப்படும் கருத்தாகும்.

1974ஆம் ஆண்டிலேயே மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் குடமுழுக்கை முன்னின்று நடத்திய பாரம்பரியம் பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் குடும்பத்திற்கு உண்டு. தற்போது அந்தத் திருக்கோயிலின் அறங்காவலர் குழுத் தலைவராக ருக்மணி பழனிவேல் ராஜன் உள்ளார்.

அறங்காவலர் குழுவில் ருக்மணி பழனிவேல் ராஜன், சுப்புலட்சுமி, மீனா ஆகிய மூன்று பெண்கள் உள்ளிட்ட ஐந்து பேர் நியமிக்கப்பட்டனர். இவர்களுடன் பல்வேறு திருக்கோயில் திருப்பணிகளுக்கு பெரும் உபயங்களைச் செய்த பி.கே.என். செல்லையா மற்றும் மருத்துவர் சீனிவாசன் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

பி.கே.என். செல்லையா, அழகர்கோயிலில் வாயிற் கதவுக்கு சுமார் ரூ.1 கோடி மதிப்பில் வெள்ளித் தகடு அமைத்துக் கொடுத்ததுடன், மீனாட்சி அம்மன் திருக்கோயில் வீர வசந்தராயர் மண்டபத் திருப்பணிக்கும் தாராளமாக உதவியவர்.

கைம்பெண்களை அறங்காவலர்களாக நியமித்ததே சமூகநீதிக்குச் சான்று

இந்த அறங்காவலர் குழுவில் இடம்பெற்றவர்களில் இருவர் கைம்பெண்கள். கைம்பெண்களை எவ்வாறு திருக்கோயில் அறங்காவலர்களாக நியமிக்கலாம் என்று அப்போது நீதிமன்றத்திற்குச் சென்றபோது, நீதிமன்றமே அதற்கு உரிய பதிலை அளித்தது.

“அவர்களும் மனிதர்கள்தான்” என்ற சமூகநீதிக் கோட்பாட்டின் அடிப்படையில், கைம்பெண்ணை திருக்கோயில் அறங்காவலராக மட்டுமின்றி அறங்காவலர் குழுத் தலைவராகவும் நியமித்த பெருமை அன்றைய திராவிட மாடல் அரசையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களையும் சாரும்.

**“சட்டத்தின் ஆட்சியாக இருக்க வேண்டும்”**

ஒரு அரசு என்பது சட்டத்தின் ஆட்சியாக இருக்க வேண்டுமே தவிர, சட்டத்தை மீறிச் செயல்படும் ஆட்சியாக இருக்கக் கூடாது.

இந்தவிவகாரத்தைஏதோ ஒரு தனிநபரின் பெயரை அழைப்பிதழில் சேர்க்க வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினையாக அமைச்சர் திசைதிருப்ப முயல்கிறார்.

1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் சட்டத்தின் பிரிவு 6(22)ன்படி, ஒரு சமய நிறுவனத்தின் நிர்வாகம் எந்த நபரிடமோ அல்லது எந்த அமைப்பிடமோ ஒப்படைக்கப்பட்டிருக்கிறதோ, அந்த நபர் அல்லது அமைப்புதான் “அறங்காவலர்” என சட்டம் வரையறுக்கிறது.

அதேபோல் சட்டப்பிரிவு 28ன்படி, ஒவ்வொரு சமய நிறுவனத்தின் அறங்காவலரும் அறக்கட்டளையின் விதிமுறைகள் மற்றும் அந்தத் திருக்கோயிலின் வழக்காற்றைப் பின்பற்றி அதன் விவகாரங்களை நிர்வகிக்க வேண்டும்.

இந்த விவகாரம் தொடர்பாக மதுரை கிளையில் Item No.50ஆக வழக்கும் விசாரணைக்கு வரவுள்ளது.

**அறங்காவலர் குழு பெயரளவிலான அமைப்பு அல்ல**

அறங்காவலர் குழு என்பது பெயரளவிலான அமைப்பு அல்ல. சட்டம் மற்றும் விதிகளின்படி அதற்குத் தெளிவான அதிகாரங்களும் பொறுப்புகளும் உள்ளன.

அறங்காவலர் குழுக் கூட்டம் நடைபெறுவதற்குக் கூட உரிய quorum அவசியம். மூன்று பேர் கொண்ட குழுவாக இருந்தால் குறைந்தபட்சம் இரண்டு பேரும், ஐந்து பேர் கொண்ட குழுவாக இருந்தால் குறைந்தபட்சம் மூன்று பேரும் இருக்க வேண்டும். கூட்டத்திற்கான அஜெண்டாவும் விதிகளின்படி முன்கூட்டியே அறங்காவலர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

இவ்வாறு திருக்கோயில் நிர்வாகத்தில் சட்டப்பூர்வமான அதிகாரமும் பொறுப்பும் கொண்ட அறங்காவலர்களை, “வருவோர் போவோர் பெயர்களையெல்லாம் அழைப்பிதழில் போட முடியாது” என்ற தொனியில் அமைச்சர் குறிப்பிடுவது ஆணவத்தின் உச்சமாகும்.

“ராணுவத்தால் அழிந்தவர்களைவிட, ஆணவத்தால் அழிந்தவர்கள்தான் அதிகம்” என்பதை சம்பந்தப்பட்ட அமைச்சர் நினைவில் கொள்ள வேண்டும்.

வளர்ச்சித் திட்டங்களை ரத்து செய்வதே இந்த ஆட்சியின் வழக்கமா?

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் கீழ் திராவிட மாடல் ஆட்சியில் வரையறுக்கப்பட்ட காஞ்சிபுரம் புதுநகர் வளர்ச்சித் திட்டம் மற்றும் பாரம்பரிய வளர்ச்சித் திட்டம் ரத்து செய்யப்பட்டிருப்பது குறித்தும் பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பினர்.

வளர்ச்சிப் பணிகளை முடக்குவதும், ஏற்கனவே திட்டமிடப்பட்ட மக்கள் நலத் திட்டங்களை ரத்து செய்வதும் தற்போதைய ஆட்சியின் வழக்கமாகிவிட்டது.

இந்தத் திட்டங்களை ஏன் ரத்து செய்தீர்கள் என்று கேள்வி எழுப்பியபோது, “அந்தத் துறையின் அமைச்சர் இப்படித்தான் வருவார்; அவரிடமே போய் கேளுங்கள்” .

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

### கிணத்துக்கடவு - பொள்ளாச்சியை

# மதுரை ரயில்வே கோட்டத்துடன் இணைக்க வேண்டும்!

## ஒன்றிய ரயில்வே அமைச்சருக்கு – கே.ஈஸ்வரசாமி எம்.பி. மனு!



பொள்ளாச்சி, செப். 2 -

கிணத்துக்கடவு பொள்ளாச்சி பகுதியை பாலக்காடு ரயில்வே கோட்டத்திலிருந்து பிரித்து மதுரை ரயில்வே கோட்டத்துடன் இணைக்க வேண்டும் என பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர், ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ்வுக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது :-

கிணத்துக்கடவு பொள்ளாச்சி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை பாலக்காடு ரயில்வே கோட்டத்திலிருந்து பிரித்து மீண்டும் மதுரை ரயில்வே கோட்டத்துடன் இணைக்க வேண்டும் என்று இந்த பகுதி மக்கள் நீண்டகாலமாக வலியுறுத்தி வருகின்றனர். இந்த கோரிக்கை புவியியல் அமைப்பு, நிர்வாக வசதி மற்றும் பயணிகளின் போக்குவரத்து ஆகியவற்றை அடிப்படையாக கொண்டதாகும்.

இந்த கோரிக்கையை ரயில்வே நிர்வாகத்திடம் பலமுறை முன்வைத்தபோது, ரயில்வே கோட்டங்களை உருவாக்குதல், மறுசீரமைத்தல் அல்லது அதன் நிர்வாக எல்லைகளை மாற்றுதல் என்பது கொள்கை சார்ந்த முடிவு. இது குறித்த இறுதி முடிவை

ரயில்வே வாரியமும் ஒன்றிய அரசும் எடுக்க வேண்டும் என்றும் கூறி வந்தனர். இந்நிலையில், மங்களூரு பகுதியை பாலக்காடு ரயில்வே கோட்டத்திலிருந்து பிரித்து மைசூர் ரயில்வே கோட்டத்துடன் இணைக்க ரயில்வே வாரியம் முடிவு செய்துள்ளதாக சமீபத்தில் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் நிர்வாக அடிப்படையில் ஏற்கனவே உள்ள ரயில்வே கோட்டங்களின் நிர்வாக எல்லைகளை மறுபரிசீலனை செய்து மாற்றியமைக்க முடியும் என்பதை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

எனவே, மங்களூரு பகுதியை பாலக்காடு கோட்டத்திலிருந்து பிரித்து வேறு ஒரு ரயில்வே கோட்டத்துடன் இணைக்க முடியும் என்ற நிலையில், அதே அடிப்படையில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ள கிணத்துக்கடவு, பொள்ளாச்சி பகுதியின் கோரிக்கையையும் பரிசீலித்து முடிவெடுக்க வேண்டும்.

மேலும், பொள்ளாச்சி பகுதி தமிழ்நாட்டின் தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளுடன் நெருக்கமான புவியியல் மற்றும் பயணிகள் போக்குவரத்து தொடர்புகளை கொண் டுள்ளது.

இப்பகுதியை மதுரை ரயில்வே கோட்டத்துடன் இணைப்பதன் மூலம் நிர்வாக வசதி மேம்படுவதுடன், பயணிகள் சேவைகள், ரயில்வே உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி பணிகளை மேலும் சிறப்பாக ஒருங்கிணைக்க முடியும்.

மேலும், தமிழ்நாட்டின் தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளுக்கிடையிலான பொதுமக்களின் பயணத் தேவைகளை யும் கருத்தில் கொள்ளும் போது, புவியியல் ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் கிணத்துக்கடவு, பொள்ளாச்சி பகுதியை மதுரை ரயில்வே கோட்டத்துடன் இணைப்பது மிகவும் பொருத் தமானதாக இருக்கும். எனவே, கிணத்துக்கடவு, பொள்ளாச்சி பகுதியை பாலக்காடு ரயில்வே கோட்டத்திலிருந்து பிரித்து மதுரை ரயில்வே கோட்டத்துடன் இணைக்க ரயில்வே அமைச்சரும், ரயில்வே வாரியமும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் கூறி உள்ளார்.



ஈரோடு தெற்கு மாவட்டக் கழக இளைஞரணி துணை அமைப்பாளர் அந்தியூர் இரா.நித்தினுக்குச் சொந்தமான “நந்திதா கார்ஸ்” வீல் அலைன்மென்ட் ஷோ ரூமை முன்னாள் மாவட்ட துணைத் தலைவர் கஸ்தூரி வரவேற்பில் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துச்சாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஆகியோர் திறந்து வைத்தனர். நிகழ்வில் மாநகரச் செயலாளர் மு.சுப்ரமணியம், மாநகர இளைஞரணி அமைப்பாளர் கே.டி.சேந்தபுகழன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


